செய்தி வெளியீட்டு எண்.971 நாள்: 15.12.2009

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை
பத்திரிக்கை செய்தி

மருந்து கட்டுப்பாடு இயக்குநர் அவர்களின் உத்தரவின் பேரில் மருந்துகள் ஆய்வாளர்கள் தமிழகத்தின் பல்வேறு இடங்களில் ஒரே நேரத்தில் திடீர்ச்சோதனை மேற்கொண்டனர். சென்னை, கோவை மற்றும் ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரையில் இச்சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

கோவையில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் நான்கு மருந்து கடைகளில் தகுந்த ஆவணங்கள் இல்லாமல் போதைக்கு பயன்படுத்தக்கூடிய மருந்துகளை வாங்கி விற்பனை செய்தது கண்டறியப்பட்டு மருந்து மற்றும் அழகு சாதன சட்ட விதிகளின்படி மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கீழக்கரையில் ஐந்து மருந்து கடைகளில் தகுந்த கொள் முதல் இரசீதுகள் இல்லாமல் மருந்துகளை வைத்திருந்தது, மற்றும் மருந்து குறிப்பு பதிவேடு **(Prescription Register)** பராமரிக்கப்படாமல் இருந்ததும் கண்டறியப்பட்டு அந்த நிறுவனங்கள் மீது மருந்து சட்டவிதிகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சென்னையில் 8 இடங்களில் மேற்கொண்ட சோதனைகளில் 2 இடங்களில் தகுந்த மருந்து உரிமங்கள் இல்லாமல் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த ரூபாய் 1.85 இலட்சம் மதிப்புள்ள மருந்துகள் கைப்பற்றப்பட்டன. ஐந்து மருந்து கடைகளில் காலாவதியான மருந்துகள் வைத்திருந்தது கண்டறியப்பட்டு அவைகள் கைப்பற்றப்பட்டன. ஒரு நிறுவனத்தில் தகுந்த கொள்முதல் இரசீது இல்லாமல் வைக்கப்பட்டிருந்த மருந்துகளை தடை செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் அனைத்து இடங்களிலும் மருந்து மற்றும் அழகு சாதனச் சட்ட விதிகளின்படி மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வி.கு. சுப்புராஜ்,
அரசு முதன்மைச் செயலாளர்

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.